தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## அடுத்த 24 மணி நேரத்தில் தென் கடலோர, டெல்டா மாவட்டங்களில் கன மழை பெய்யும்: வானிலை அறிவிப்பு

டெல்டா, தென் கடலோர மாவட்டங்களில், அடுத்த 24 மணி நேரத்தில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கள் கூறியதாவது: வட தமிழகக் கடலோரப் பகுதியை ஒட்டிய தென் மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, வட இலங்கையை ஒட்டி நகர்ந்துள்ளது. இதன் காரணமாக, தமிழகக் கடலோர மாவட்டங்களில் கடந்த 24 மணி நேரத்தில் பரவலாக மழை பெய்துள்ளது. வரும் 24 மணி நேரத்தில், கடலோர மாவட்டங்களில் அனேக இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்யும். டெல்டா, தென் கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழைக்கு வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்தவரை பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இருப்பினும், மாநகரின் ஒரு சில பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

மழையளவு...

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டம் புத்தன், பெருஞ்சாணி அணைப் பகுதிகளில் தலா 100 மி.மீட்டர் மழை பதிவாகி யுள்ளது. அதேபோல் திருநெல்வேலி மாவட்டம் ஆயிக்குடியில் 80 மி.மீ, கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டியில் 70 மி.மீ, கடலூர், சிதம்பரம், காரைக்கால் ஆகிய இடங்களில் தலா 50 மி.மீ, கன்னியாகுமரி மாவட்டம்

இரணியல், பரங்கிப்பேட்டை, தரங்கம்பாடி, பேச்சிப்பாறையில் தலா 40 மி.மீ, திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு, நாகர்கோவில், சீர்காழி, மயிலாடுதுறை, மயிலாடி, தக்களை ஆகிய இடங்களில் தலா 30 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

மீனவர்களுக்கு...:

வட தமிழகம், புதுச்சேரி கடலோரப் பகுதிகளில், மணிக்கு 45 முதல் 55 கி.மீ. வேகத்தில் வடகிழக்கு திசையிலிருந்து பலத்த காற்று வீசக்கடும் என்பதால் மீனவர்கள் கடலுக்குள் எச்சரிக்கையுடன் செல்ல வேண்டும் என ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தஞ்சை மாவட்டத்தில் ஒரே நாளில் நடப்பட்ட 34 லட்சம் மரக்கன்றுகள்



தஞ்சாவூர் மாவட்டத்தை பசுமைமயமாக்கும் திட்டத்தின் கீழ், மாவட்டம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் 34,34,229 மரக்கன்றுகள் நடப்பட்டன. இதை கின்னஸ் சாதனையாக்கும் முயற்சியில் மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள காடுகளின் பரப்பளவை 5.71 சதவீதத்திலிருந்து அதிகரித்து, மழைவளத்தைப் பெருக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்கவும், மாவட்டத்தில் 34 லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு, தமிழக அரசின் அனுமதியோடு மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் புதிய திட்டத்தை உருவாக்கினார். இதற்காக கடந்த சில மாதங்களாக மரக்கன்றுகள் தயாரிக்கும் பணி மாவட்டத்தில் 48 இடங்களில் நடைபெற்றது. ஒரே நாளில் 34 லட்சம் மரக்கன்றுகளை நடுவதற்கு கல்வி நிறுவனங்கள், சமூக நல அமைப்புகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலரும்

ஒத்துழைக்க வேண்டும் என்று ஆட்சியர் வேண்டுகோள் விடுத்தார். இதற்கு பல தரப்பினரும் ஆதரவு தெரிவித்தனர். இதையடுத்து, மாவட்டத்தில் ஒரே நாளில் 34 லட்சம் மரக்கன்றுகள் நடும் பணி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது. தஞ்சாவூர் சமுத்திரம் ஏரி அருகேயுள்ள புதை சாக்கடை சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் மாநில அமைச்சர் ஆர். வைத்திலிங்கம் மரக்கன்றுகள் நடும் பணியை தொடக்கிவைத்தார். இதையடுத்து, மரக்கன்றுகள் நடும் பணியில் மாவட்டம் முழுவதும் 70 ஆயிரம் பேர் பங்கேற்றனர். இத்திட்டத்தை கின்னஸ் சாதனையாக்கும் முயற்சியின் பார்வையாளர்களாக பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத் துணைவேந்தர் நல். ராமச்சந்திரன், தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ம. திருமலை ஆகியோரை மாவட்ட நிர்வாகம் நியமித்தது.

இருவரும் மரக்கன்றுகள் நடப்பட்டது தொடர்பான தகவல்களை உரிய ஆவணங்களுடன் அளித்து கின்னஸ் சாதனைக்கு இரு துணைவேந்தர்களும் பரிந்துரை செய்யவுள்ளனர்.

## <u>மானியம் அளிக்கக் கோழிப் பண்ணையாளர்கள் கோரிக்கை</u>

கேரளத்துக்கு அனுப்ப முடியாமல் தேங்கியுள்ள முட்டைகளை வட மாநிலங்களுக்கு அனுப்பும்போது ஏற்படும் கூடுதல் செலவைச்சமாளிக்க மானியம் வழங்க வேண்டும் என்று நாமக்கல் மாவட்ட கோழிப்பண்ணை யாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கேரள மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதால் 6-ஆவது நாளாக நாமக்கல் மாவட்டத்தில் முட்டைக் கோழி பண்ணையாளர்கள் பெரும் இழப்பைச் சந்தித்து வருகின்றனர். கேரளத்தில் முட்டை விற்பனை பெருமளவு குறைந்தது. இதனால் நாமக்கல் பண்ணைகளில் கோடிக் கணக்கில் முட்டைகள் தேங்கியுள்ளன. இவற்றை வேறு மாநிலங்களுக்கு விற்பனை செய்யும் முயற்சியில் பண்ணையாளர்கள் ஈடுபட்டுள்ளனர். புதுதில்லி மண்டலத்தில் ஒரு முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை ரூ.4.15-

ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் நாமக்கல் மண்டலத்தில் என்.இ.சி.சி முட்டை விலையை ரூ.3.76-ஆக நிர்ணயம் செய்துள்ளது. ஆனால், ஒரு முட்டையை ரூ.3 முதல் ரூ.3.25 வரை பண்ணையாளர்கள் விற்பனை செய்கின்றனர். தற்போது புதுதில்லியில் விலை அதிகம் உள்ளதால், அங்குள்ள வியாபாரிகள் நாமக்கல்லில் முட்டை எடுக்க அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். கேரளத்தில் பறவைக் காய்ச்சலால் அங்கு முட்டை அனுப்ப முடியவில்லை. இதனால் நாமக்கல் பண்ணையாளர்கள் வெளி மாநில வியாபாரிகளைத் தொடர்பு கொண்டு முட்டை அனுப்பி வருகின்றனர். பண்ணைகளில் முட்டைத் தேக்கத்தைத் தடுக்க வேறு வழியில்லாததால் மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், குஜராத் மாநிலங்களுக்கு நாமக்கல்லில் இருந்து முட்டை அனுப்பப்படுகிறது. இது குறித்து முட்டைக் கோழி பண்ணையாளர்களிடம் கேட்டபோது, முட்டைத் தேக்கத்தைத் தடுக்க வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லை. பண்ணையாளர்கள் நேரடியாகவும் வியாபாரிகள் மூலமும் வடமாநிலங்களுக்கு முட்டைகளை அனுப்பி வருகின்றனர். ஒரு லோடுக்கு 2.40 லட்சம் முட்டை அனுப்பப்படுகிறது. வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படும் முட்டைக்கு லாரி வாடகையாக ரூ.50 ஆயிரம் முதல் ரூ.60 ஆயிரம் வரை செலவாகிறது. கூடுதல் செலவைச் சமாளிக்க என்.இ.சி.சி மானியம் அளிக்க வேண்டும் என்றனர்.

## பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகள் அளிப்பு

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட தங்காயூரில் விலையில்லா ஆடுகள் வழங்கும் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த விழாவுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.செல்வராஜ் தலைமை வகித்தார். கால்நடைத் துறை இணை இயக்குநர் கே.எம்.சிவப்பிரகாசம் வரவேற்றார். தங்காயூர் ஊராட்சிப் பகுதியைச் சேர்ந்த 104 பயனாளிகளுக்கு 416 விலையில்லா ஆடுகளை வழங்கி மாநில நெடுஞ்சாலை, சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்

எடப்பாடி கே.பழனிசாமி பேசியது: எடப்பாடியில் அரசுக் கல்லூரி புதிய கட்டடம் கட்டுவதற்காக ரூ. 8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது, மேலும் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தாலிக்குத் தங்கம் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் இதுவரை 20431 பயனாளிகளுக்கு 81724 கிராம் தங்கம் வழங்கப்பட்டுள்ளது. விலை யில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 273 ஊராட்சிகளில் 24,838 பயனாளிகளுக்கு 99,426 விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆடுகள் இதுவரை 1,11,920 குட்டிகளை ஈன்றுள்ளது. மேலும், இந்த மாவட்டத்தில் 4,45,428 விலையில்லா மின்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. அம்மா திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது என்றார். இந்த விழாவில் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் கரட்டூர் கே.மணி, பேரூராட்சித் தலைவர் ஜி.பழனிசாமி, எடப்பாடி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் ஏ.மாதேஸ், நகர்மன்றத் தலைவர் டி.கதிரேசன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் ராஜேந்திரன், எருமப்பட்டி மாணிக்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். தங்காயூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஆர்.பாலாஜி நன்றி கூறினார்.

## 264 விவசாயிகளுக்கு ரூ. 1.20 கோடி பயிர்க்கடன்

அரியலூர் மாவட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களைச் சேர்ந்த 264 விவசாயிகளுக்கு ரூ. 1.20 கோடி பயிர்க் கடனை ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் அண்மையில் வழங்கினார். அரியலூர் மாவட்டக் கூட்டுறவுத் துறை சார்பில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு பயிர்க்கடன் வழங்கும் நிகழ்ச்சி ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஆட்சியர் தலைமை வகித்தார். மக்களவை உறுப்பினர் சந்திரகாசி முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தைச் சேர்ந்த 264

விவசாயிகளுக்கு பயிர்க்கடன் தொகைக்கான காசோலைகளை வழங்கி ஆட்சியர் பேசியது: அரியலூர் மாவட்ட விவசாயிகளுக்கு 2014-15 ஆம் ஆண்டுக்கு தமிழக அரசின் கூட்டுறவுத் துறை மூலம் பயிர்க்கடனாக ரூ. 90 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, கடந்த அக்டோபர் மாதம் வரை 64 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 13,106 விவசாயிகளுக்கு ரூ. 67.78 கோடி பயிர்க்கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், பயிர்க்கடனை தவணை தவறாமல் செலுத்துபவர்களுக்கு தமிழக அரசால் வட்டித் தொகை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது நெல், பருத்தி, கரும்பு, முந்திரி, மரவள்ளிக்கிழங்கு உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக, அரியலூர் மாவட்டத்திலுள்ள 17 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களைச் சேர்ந்த 264 விவசாய சங்க உறுப்பினர்களுக்கு 780.55 ஏக்கர் பரப்பளவில் பயிர்கள் சாகுபடி செய்ய ரூ. 1.20 கோடி பயிர்க்கடனாக இன்று வழங்கப் பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் மற்றும் விதைநெல் ஆகியனவும் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றை தங்கள் பகுதியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை அணுகி விவசாயிகள் பெற்று பயனடையலாம் என்றார் ஆட்சியர். நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் பா. ரவீந்திரன், உடையார்பாளையம் கோட்டாட்சியர் கருணாகரன், கூட்டுறவு துணைப் பதிவாளர் (பொ) சித்ரா, கூட்டுறவு சார்பதிவாளர்கள் மகாலிங்கம், நீதிமணி, ராஜ்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கால்நடை மருத்துவ முகாம்

நாகை மாவட்டம், சிக்கல் ஊராட்சியில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் கால்நடை இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. முகாமை தொடங்கிவைத்து மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி பேசியது:

தமிழக அரசு கால்நடைகளை பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கால்நடை மருந்தகம் இல்லாத பகுதிகளில் சிறப்பு முகாம்களை மாதம்தோறும் நடத்தி வருகிறது. அந்த வகையில் நாகை மாவட்டத்தில் 434 ஊராட்சிகளிலும் இந்த சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. கால்நடை வளர்ப்போர் இந்த முகாம்களை பயன்படுத்தி தங்களது கால்நடைகளை பாதுகாக்க வேண்டும். இந்த சிறப்பு முகாம்கள் மூலம் நாகப்பட்டினம் மாவட்டம் முழுவதும் சுமார் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் பயனடையும் என்றார் முனுசாமி.

முகாமில் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் (பொறுப்பு) க. நாகராஜன், வருவாய் கோட்டாட்சியர் அ. சிவப்ரியா, செய்திமக்கள் தொடர்பு அலுவலர் கோ. அண்ணாதுரை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## நன்னிலத்தில் 19.7 மி.மீ. மழை

திருவாரூர் மாவட்டம், நன்னிலத்தில் சனிக்கிழமை 19.7 மில்லி மீட்டர் மழைப் பதிவானது. மாவட்டத்தில் தொடர் மழைக் காரணமாக கால்வாய்களில் நீரின் அளவு அதிகரித்துள்ளது. வெள்ளிக்கிழமை பெய்ய தொடங்கிய மழை விட்டுவிட்டு ஞாயிற்றுக்கிழமை வரை பெய்து வருகிறது.ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக நன்னிலத்தில் 19.7 மில்லி மீட்டர் மழைப் பெய்துள்ளது. பிற இடங்களில் பெய்த மழையளவு மில்லி மீட்டரில் வருமாறு: திருவாரூர் - 13.20, குடவாசல் - 12.80, பாண்டவையாறு தலைப்பு - 10.60, நீடாமங்கலம் - 10, திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி - 9, வலங்கைமான் - 6.40, முத்துப்பேட்டை - 2.80 என்ற அளவில் மழைப் பெய்தது. ஞாயிற்றுக்கிழமையும் விட்டுவிட்டு மழை பெய்தது.

## பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 75 அடியை எட்டியது

குமரி மாவட்டத்தில் பிரதான அணைகளில் ஒன்றான பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலையில் 75 அடியை எட்டியது. இதையடுத்து இந்த அணைக்கு வரும் கூடுதல் தண்ணீர் பாசனக் கால்வாய் வழியாக திறந்து விடப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை முதல் தொடர் மழை பெய்து வந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை மழை சற்று ஓய்ந்தது. சனிக்கிழமை வரை தொடர்ந்து மழை பெய்து வந்த நிலையில் பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகளின் பாசன மதகுகள் மூடப்பட்டு கால்வாய்களில் வெளியேற்றப்பட்டு வந்த தண்ணீர் நிறுத்தப்பட்டது. இதனால், அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வந்தது. ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 75 அடியை எட்டியது. பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 46 அடியை நெருங்கியது. இந்நிலையில், மழை தணிந்ததால் இவ்விரு அணைகளுக்கும் வரும் நீர் மீண்டும் பாசனக் கால்வாய்களில் திறந்து விடப்பட்டுள்ளது. இதனிடை யே, அணைப்பகுதிகளை பார்வையிட்ட பொதுப்பணித் துறை செயற் பொறியாளர் சுப்பிரமணி கூறியதாவது: பெருஞ்சாணி அணையிலிருந்து விநாடிக்கு 350 கன அடி பாசனக்கால்வாய் வழியாக வெளியேற்றப்பட்டு வருகிறது. பேச்சிப்பாறை அணையின் பாசனக்கால்வாய் வழியாக விநாடிக்கு 100 கன அடியாக திறந்து விடப்பட்டுள்ளது. மழைக் காலம் முடிவடைந்ததும், இந்த இரு அணைகள் உள்பட அனைத்து அணைகளிலும் உச்ச அளவு நீர்மட்டத்தை தேக்க முடிவு செய்துள்ளோம் என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விழுப்புரம் பகுதியில்அதிகபட்ச மழை பதிவு**

விழுப்புரம்: மாவட்டத்தில் நேற்று அதிகபட்சமாக விழுப்புரம் மற்றும் மரக்காணத்தில் 16 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பரவலாக தொடர் மழை பெய்து வருகிறது. இதில் மாவட்டத்தில் நேற்று பெய்த மழையளவு விபரம் : செஞ்சியில் 1.50 மி.மீ., திருக்கோவிலூர் 5.50 மி.மீ., திண்டிவனம் 3 மி.மீ., விழுப்புரம் 16 மி.மீ., உளுநதூர்பேட்டை 14 மி.மீ., வானூர் 21 மி.மீ., சங்கராபுரம் 1 மி.மீ., கள்ளக்குறிச்சி 1.50 மி.மீ., மரக்காணம் 16 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் மொத்தம் 79.50 மி.மீ., அதன் சராசரி 8.84 மி.மீ., மழை பதிவாகியது.

**வடகிழக்கு பருவ மழை: கம்பு சாகுபடி அமோகம்**

தர்மபுரி: மாவட்டத்தில் பெய்த, வடகிழக்கு பருவ மழை காரணமாக, கம்பு நன்கு விளைந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில் விவசாயிகள் கம்பு, கேழ்வரகு உள்ளிட்ட சிறு தானிய பயிர்களை, ஆண்டு முழுவதும் மானாவாரியாகவும், இறவை பாசனத்திலும், சாகுபடி செய்து வருகின்றனர். குறிப்பாக, பென்னாகரம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் ஆர்வத்துடன், கம்பு சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர்.தென்மேற்கு பருவ மழையை எதிர்பார்த்து, பென்னாகரம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் அதிகளவில், கம்பு சாகுபடியில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், தென்மேற்கு பருவமழை, விவசாயிகள் எதிர்பார்த்த, அளவு பெய்தது. ஆனால், கம்பு கதிர் விடும் நேரங்களில்,

போதிய மழை பெய்யவில்லை. இதனால், கம்பு சாகுபடி செய்திருந்த விவசாயிகள் கவலை அடைந்தனர். மேலும், இப்பகுதியை சேர்ந்த, பல விவசாயிகள் தண்ணீரை விலைக்கு வாங்கி, கம்பு பயிருக்கு, பாசன வசதி செய்தனர். இந்நிலையில், வடகிழக்கு பருவமழை தொடக்கத்தில், பென்னாகரம் உட்பட, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், மழை குறிப்பிட்ட அளவு பெய்தது. இதனால், கம்பு உ ட்பட, விவசாயிகள் சாகுபடி செய்த பயிர்களுக்கு பாசன வசதி கிடைத்தது. வடகிழக்கு பருவ மழை காரணமாக, கம்பு பயிர் நன்கு கதிர் விட்டு வளர்ந்துள்ளது. மேலும், மாவட்டத்தில் தொடர்ந்து குளுமையான கால நிலை நிலவி வருவதால், தற்போது, கம்பு நன்கு விளைந்து, அறுவடைக்கு தயாராக உள்ளது. இந்தாண்டு, கம்பு சாகுபடியில் அதிக மகசூல் கிடைக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து உள்ளனர்.

## <u>பறவைக்காய்ச்சல் நோய் எதிரொலி; கோழிப்பண்ணையில் அதிகாரிகள் ஆய்வு</u>

ஈரோடு : அண்டை மாநிலங்களில் பரவி வரும் பறவைக்காய்ச்சல் நோய் எதிரொலியாக, ஈரோட்டில் உள்ள கோழிப்பண்ணைகளில், கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரிகள், திடீர் ஆய்வு நடத்தினர். ஈரோடு மாவட்டத்தில், 487 கோழிப்பண்ணைகள் உள்ளன. அவற்றில், 400 கறிக்கோழிப்பண்ணைகள், 87 முட்டைக்கோழிப்பண்ணைகளும் இயங்கி வருகின்றன. அண்டை மாநிலமான கேரளாவில், பறவைக்காய்ச்சல் நோய்கள் தாக்கி வருகிறது.தமிழகத்தில், ஈரோடு மாவட்டத்தில் பறவை காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்க, கலெக்டர் பிரபாகரன் உத்தரவின் பேரில், கால்நடை பராமரிப்புதுறையினர், ஆங்காங்கே மாவட்ட எல்லையில், 24 மணிநேர கண்காணிப்பை பலப்படுத்தி உள்ளனர்.இதன் தொடர்ச்சியாக, ஈரோடு சின்னியம்பாளையத்தில், ரூஸ்டர் கோழிப் பண்ணையில், கால்நடை பராமரிப்பு துறையினர், நேற்று முன்தினம் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது கோழிப் பண்ணையின்

சுகாதாரம் குறித்தும், உயிரியியல் முறை பின்பற்றுகின்றனரா? என்றும் ஆய்வு நடத்தினர்.மேலும், கோழிப்பண்ணைகளை சுத்தமாக வைத்திருக்க வும், வெளி ஆட்களை உள்ளே அனுமதிக்க கூடாது எனவும், உணவு வைத்திருக்கும் இடம் சுத்தமாக வைத்திருக்கும்படியும், மற்ற வெளிப்புற பகுதியில் கிருமி நாசினிகள் தெளிக்கவும், கோழிப்பண்ணை உரிமை யாளருக்கு, அதிகாரிகள் யோசனை தெரிவித்தனர்.ஈரோடு மண்டல கால்நடை பராமரிப்புத்துறை இயக்குனர் ஜெயராமன், உதவி இயக்குனர் தங்கவேலு, துணை இயக்குனர் டாக்டர் பிரகாசம், மருத்துவர் ராஜாத்தி உள்பட பலர் பங்கேற்றனர்.

## 2,650 டன் பொட்டாஷ் உரம் வருகை; 4 மாவட்டங்களுக்கு வினியோகம்

ஈரோடு : நான்கு மாவட்ட விவசாயிகளுக்கு, வினியோகம் செய்வதற்காக, பொட்டாஷ் உரம் வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தாண்டு, வடகிழக்கு பருவ மழை காலத்தில், ஓரளவு நல்ல மழை பெய்தது. அணை, நீர் நிலைகள் நிரம்பியதால் நெல், வாழை, கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பல்வேறு பண பயிர்களை, விவசாயிகள் நடவு செய்து வருகின்றனர். பயிர்களுக்கு அடி உரமாக பொட்டாஷ் இடப்படுகிறது.உர தட்டுப்பாடு காரணமாக, கூட்டுறவு சங்கங்கள் ஸ்டாக்கை தேவைப்படும் இடங்களுக்கு, அனுப்பி வைத்து வருகின்றனர். சில தினங்களுக்கு முன், டி.ஏ.பி., உரம், 2,600 டன் வந்தது. இந்நிலையில் நேற்று, 2,650 டன் பொட்டாஷ் உரம், 52,992 மூட்டைகள் (தலா, 50 கிலோ) ரயில் மூலம், ஈரோடு வந்தது.தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், டெண்டர் மூலம் குஜராத்தில் உள்ள கிரிசக் பாரதி கூட்டுறவு லிமிடெட்டுக்கு, பொட்டாஷ் உரம் சப்ளை செய்ய கேட்டு கொண்டது. மத்திய அரசு மூலம், ஓமன் நாட்டில் இருந்து பொட்டாஷ் உரம் விசாகப்பட்டினம் கடற்கரைக்கு வந்தது. அங்கிருந்து, சரக்கு ரயில் மூலம், ஈரோடுக்கு வந்தது.ஈரோடு மட்டுமின்றி நாமக்கல், சேலம், தர்மபுரி ஆகிய மாவட்ட

கூட்டுறவு சங்கங்களுக்கு, வினியோகிக்கப்படும்.ரயிலில் வந்த உரத்தின் மதிப்பு, ரூ.4.24 கோடி ஆகும். 50 கிலோ கொண்ட உர மூட்டை, 800 ரூபாயாகும்.சுமை தூக்கும் தொழிலாளர்கள் மூலம், நூற்றுக்கணக்கான லாரிகளில் ஏற்றப்பட்டு, நான்கு மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.ரயிலில் இருந்து விரைவாக மூட்டைகளை இறக்கி கூட்டுறவு சங்கங்களுக்கு கொண்டு செல்லும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## <u>பனிப்பொழிவால் மல்லிகைப்பூ வரத்து சரிவு; விலை உயர்வால் விவசாயிகள் திருப்தி</u>

அந்தியூர் : அந்தியூர் அடுத்த பருவாச்சி, செம்புளிச்சாம்பாளையம், அம்மன்பாளையம், சேத்துனாம்பாளையம், புரகாட்டூர், பிரம்மதேசம், வேம்பத்தி உள்ளிட்ட பகுதியில், ஏராளமான விவசாயிகள், மல்லிகைப்பூ சாகுபடி செய்துள்ளனர். ஆண்டுக்கு, ஒன்பது மாதங்கள் மட்டுமே, மல்லிகைப்பூ பலன் கொடுக்கும். மீதமுள்ள, மூன்று மாதத்துக்கு செடிகளுக்கு கவாத்து செய்து விடப்படும். மல்லிகை செடிகளில், மாதத்தில், 15 நாட்களுக்கு தினந்தோறும் பூக்களை பறித்து, வருவாயை பார்த்துக்கொள்ளலாம். மீதமுள்ள, 15 நாட்கள் அரும்பு விட்டு, மொட்டு வைத்து, பலன் கொடுக்க, செடிகள் தயார்படுத்திக்கொள்ளும்.பொதுவாக, கோடை காலங்களில் மல்லிகைப்பூ அதிக அளவில் பூத்து, விவசாயி களுக்கு நல்ல மகசூலை கொடுக்கும். மழை மற்றும் பனிப்பொழிவு ஏற்படும்போது, செடிகள் நன்கு வளரும். ஆனால், அதிக அளவில் பூக்கள் பூக்காது. தற்போது பெய்த பருவ மழையை தொடர்ந்து, கடந்த, 20 நாட்களாக பனிப்பொழிவும் அதிகமாக உள்ளதால், மல்லிகைச்செடிகள், அதிகம் பூக்காததால், மகசூல் மிகவும் குறைந்துள்ளது. மல்லிகைப்பூ வரத்து குறைவால், விலை கடுமையாக உயர்ந்துள்ளது. வெயில் காலத்தில், ஒரு ஏக்கரில், 15 கிலோ முதல், 20 கிலோ விரை

மல்லிகைப்பூக்கள் கிடைக்கும். அந்த தருணத்தில், பூக்களின் விலை கிலோ, 100 ரூபாய்க்கு விற்பனையாகி, விவசாயிகளுக்கு நாளொன்றுக்கு, 1,500 முதல், 2,000 ரூபாய் வரை வருவாய் கிடைக்கும்.பனிக்காலத்தில், ஏக்கருக்கு, 300 கிராமில் இருந்து, 500 கிராம் வரை மட்டுமே, பூக்கள் கிடைக்கும். பூக்களின் விலையும், கிலோ, 800 முதல், 1,000 ரூபாய் வரைக்கூட உயர்ந்து, விவசாயிகளுக்கு லாபத்தை வழங்கும். பூக்கள் குறைவாக பூப்பதால், கூலி ஆட்கள் வைத்து வேலை வாங்காமல், கூலி கொடுக்காமல், விவசாயிகளே பூப்பறித்து, விற்பனை யில் ஈடுபடுவர். இதனால், முழு தொ கையும் லாபமாக கிடைக்கும். மல்லிகை சாகுபடி குறித்து, பருவாச்சி, காட்டூர் முன்னோடி விவசாயி, ரவி கூறியதாவது: தண்ணீர் மட்டும் இருந்தால் போதும், மல்லிகை சாகுபடி, எந்த பருவ காலத்திலும், விவசாயிகளுக்கு நஷ்டத்தை கொடுக்காது. எனவே, முறையாக மல்லிகை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு என்றும் நஷ்டம் ஏற்படாது. தற்போது, மகசூல் குறைந்தபோதிலும், விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர், என்றார்.

## <u>ஆலங்குடியில் அடை மழை</u>

ஆலங்குடி: ஆலங்குடியில் விடிய விடிய பெய்த மழை, பகலிலும் தொடர்ந்ததால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. ஆலங்குடியில், 27ம் தேதி முதல் அடை மழை பெய்து வருகிறது. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. கடை வீதிகளில் மக்கள் நடமாட்டம் இல்லாமல் வெறிச்சோடி கிடந்தது. ஆனால், விவசாயத்திற்கு தேவையான மழை என்பதால், விவசாயிகள் கிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## விவசாய தொழிலாளர் சங்க கருத்தரங்கம்

கந்தர்வக்கோட்டை: தமிழக ஜனநாயக விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநில கருத்தரங்கம், புதுக்கோட்டை மாவட்ட கந்தவர்க்கோட்டையில் நடந்தது. இதில், மாநில அமைப்பாளர் குணசேகரன் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் மூக்கையன், விவசாய குழு தலைவர் சிதம்பரநாதன் முன்னிலை வகித்தார். ஆண்டு முழுவதும் வேலை, விலைவாசிக்கேற்ற கூலி, அனைவருக்கும் தகுதி ஏற்ற வேலை கொடுக்க வேண்டும். காவிரி, முல்லைப்பெரியாறு, பாலாறு ஆகியவற்றின் நீர் உரிமையை நிலை நாட்டி, விவசாயிகளுக்கு வாழ்வளிக்க வேண்டும், என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கருத்தரங்கில், மாநிலக் குழு உறுப்பினர் கருணாகரன், தலைமைக்குழு உறுப்பினர் விடுதலைகுமரன், சங்க பொதுசெயலாளர் பாலன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## பருவ மழை கைகொடுப்பால் அதிகரிக்கும் விவசாய பரப்பு

திண்டுக்கல் : திண்டுக்கல் மாவட்டத்தில் இதுவரை 80 ஆயிரம் எக்டேரில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்துள்ளது. அக்டோபரில் பழநியில் 515 மி.மீ., கொடைக்கானலில் 419 மி.மீ., திண்டுக்கல்லில் 288 மி.மீ., ஒட்டன் சத்திரத்தில் 482 மி.மீ., வேடசந்தூரில் 365 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. நிலக்கோட்டையில் 141 மி.மீ., நத்தத்தில் 231 மி.மீ., ஆத்தூரில் 250 மி.மீ., பதிவாகியிருந்தது. இது சாரசரியை விட 163.12 மி.மீ., கூடுதலாகும். மாவட்டத்தில் அதிகபட்சமாக 20 ஆயிரம் எக்டேரில் நெல், 75 ஆயிரம் எக்டேரில் சிறுதானிங்கள், 23,288 எக்டேரில் பயறு வகைகள், 23,390 எக்டேரில் எண்ணெய்வித்துகள், 2,400 எக்டேரில் பருத்தி, 4,900 எக்டேரில் கரும்பு என மொத்தம் 1,48,978 எக்டேரில் சாகுபடி

மேற்கொள்ளப்படும். இந்த ஆண்டு 1,569 எக்டேரில் நெல், 50 ஆயிரம் எக்டேரில் சிறுதானியங்கள், 19 ஆயிரம் எக்டேரில் பயறு வகைகள், 4 ஆயிரம் எக்டேரில் எண்ணெய்வித்துகள், 3,081 எக்டேரில் பருத்தி, 1,770 எக்டேரில் கரும்பு என இதுவரை 79,420 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. அணைகளில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் சாகுபடி பரப்பு அதிகரிக்கும் என வேளாண்மைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கிராம அபிவிருத்தி திட்டம் விவசாயிகள் 30 பேர் தேர்வு

சாணார்பட்டி : மாதிரி வருவாய் கிராமங்களில் சிறுபாசன விவசாயிகள் கணக்கெடுக்கும் பணி துவங்கப்பட்டுள் ளது. கிராமங்கள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்டத்தில் கே.புதுக்கோட்டை மற்றும் சாணார்பட்டி ஒன்றியத்தில் உள்ள கணவாய்ப்பட்டி கிராமம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட வருவாய் அலுவலர் நாகேந்திரன், திண்டுக்கல் கிழக்கு தாலுகா தாசில்தார் சிந்தாமணி தலைமையில் கம்பிளியம்பட்டி வருவாய் ஆய்வாளர் முத்துலெட்சுமி, வி.ஏ.ஓ., நாகன் ஆகியோர் கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டனர். ஊராட்சி தலைவர் ஆதியான், துணைத்தலைவர் சின்னழகு, ஊராட்சி செயலர் வெற்றிவேந்தன் ஆகியோர் உடனிருந்து உதவி செய்தனர். திட்டத்தின் கீழ் 30 சிறுபாசன விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## யூரியாவுக்கு நிகரானது வேப்பம் புண்ணாக்கு; விளைநிலங்களில் பயன்படுத்த வலியுறுத்தல்

திண்டுக்கல் : யூரியா தட்டுப்பாடை தவிர்க்க விளைநிலங்களில் வேப்பம் புண்ணாக்கை பயன்படுத்துமாறு வேளாண்மை துறையினர் விவசாயி களிடம் வலியுறுத்தி வருகின்றனர். திண்டுக்கல் மாவட்டத்தில் 81 ஆயிரத்தி 881 எக்டேர் பரப்பளவில் நெல், மக்காச்சோளம், பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. யூரியாவில் 46.2 சதவீதம் தழைச்சத்து உள்ளது.

பயிர் வளர்ச்சிக்கும், செழுமைக்கும் தழைச்சத்து தேவை என்பதால் யூரியா அதிகஅளவில் விவசாயிகளால் வாங்கப்படுகிறது. மழை காலத்தில் விளைநிலங்களில் இடப்படும் யூரியா விரைவாக மண்ணில் கரைந்துவிடும். தேவைப்படும் போது பயிர் வளர்ச்சிக்கு தேவையான சக்தி இதனால் தடுக்கப்படுகிறது.விலை அதிகம் என்பதோடு கடைகளில் யூரியா உரத்திற்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள யூரியாவை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூலை எளிதாக பெறலாம். யூரியாவுடன் வேப்பம்புண்ணாக்கை நன்கு கலந்து கிளறிவிட்டு பயன்படுத்தினால் பயிர்களின் வேர்பிடிப்பு பகுதிகளில் தாக்கும் பூச்சிகளை இந்த கலவை முற்றிலுமாக அழித்து விடும். பயிரின் வளர்ச்சி சீராக இருக்கும். வேளாண்துறை இணை இயக்குனர் சம்பத் குமார் கூறுகையில், "தேவைக்கேற்ப யூரியாவை பயன்படுத்த விவசாயிகள் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அதிக அளவில் யூரியாவை விளைநிலங்களில் பயன்படுத்துவதால் எதிர்பார்க்கும் தழைச்சத்து முழுமையாக கிடைப்பதற்கு பதிலாக பயிரின் வளர்ச்சியில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும். இதை தவிர்க்க இயற்கை வழிமுறைகளை அவ்வப்போது கையாள வேண்டும். வேப்பம் புண்ணாக்குடன் யூரியாவை கலந்து இடுவதன் மூலம் எதிர்பார்க்கும் மகசூலை பெறலாம்,"என்றார். வேளாண் தரக்கட்டுபாட்டு உதவி இயக்குனர் ரவிச்சந்திரன் கூறுகையில், "நெல் சாகுபடி மேல் உரத்திற்கு யூரியா பயன்படுத்துபவர்கள் ஏக்கருக்கு 22 கிலோவும், 20 நாட்களுக்கு பின்பு அதே அளவில் இருமுறையும் இடவேண்டும். மக்காச்சோளத்திற்கு மேல்உரமாக ஏக்கருக்கு 60 கிலோவும், 15 நாட்களுக்கு பின்பு ஏக்கருக்கு 30 கிலோவும் பயன்படுத்த வேண்டும். பருத்திக்கு 35 கிலோ பயன்படுத்த வேண்டும். மழை காலம் என்பதால் யூரியா கரையாமல் இருக்க வேப்பம்புண்ணாக்கை கலந்து பயன்படுத்த வேண்டும்,"என்றார்.

## விவசாயிகளுக்கு அறிவுரை

திருவாடானை : திருவாடானை வேளாண்மை உதவி இயக்குனர் நாகராஜ் கூறுகையில்," நெற்பயிரில் பூச்சி, நோய் தாக்குதலை குளோரியா, புரோபானோஸ், புப்ரோபெஸின் மருந்துகளை கை தெளிப்பான் மூலம் தெளித்து கட்டுப்படுத்தலாம். இம் மருந்துகள் திருவாடானை வேளாண்மை அலுவலகத்தில் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால் நுண்ணூட்டம் பெற ஜிங்க்சல்பேட்டை மணலுடன் கலந்து தெளிக்கலாம். மேலும் விபரங்களுக்கு 04561-254 080, 254 340 எண்களில் தொடர்பு கொள்ளலாம்' என்றார்.

## குமரியில் தொடர் மழை: குளம் உடைந்தது

நாகர்கோவில் : கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக அணைகளும், குளங்களும் வேகமாக நிரம்பி வரும் நிலையில் பூதப்பாண்டி அருகே குளம் உடைந்து பயிர்கள் நாசமாகியது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த ஒரு மாத காலமாக இடைவிடாது மழை பெய்து வருகிறது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து அணைகள் அதன் முழு கொள்ளளவை எட்டும் நிலையில் உள்ளது. மாவட்டத்தில் 2123 பாசன குளங்கள் உள்ளது. இதில் 1105 குளங்கள் நிரம்பி விட்டது. 538 குளங்கள் 75 சதவீதம் கொள்ளளவை எட்டியுள்ளது. 295 குளங்கள் 50 சதவீதமும், 185 குளங்கள் 25 சதவீதமும் நிரம்பி யுள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் மதியத்துக்கு பின்னர் தொடங்கிய மழை நள்ளிரவு வரையிலும் நீடித்தது. பல இடங்களிலும் இந்த மழை பலத்து பெய்தது. அதிக பட்சமாக புத்தனாறு அணை பகுதியில் 98, பெருஞ்சாணி அணை பகுதியில் 97.2, கன்னிமார் பகுதியில் 82.3 மி.மீட்டர் மழையும் பதிவானது. பூதப்பாண்டி அருகே

விவசாயத்துக்கு பயன்படும் தேங்குளம் உடைப்பெடுத்து தண்ணீர் வயல்களுக்குள் புகுந்தது. நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல்களில் தண்ணீர் தேங்கியது. வாழை தோப்புகளும் தண்ணீரில் மூழ்கியது. வயல்களில் ஏராளமான மணல் தேங்கி விட்டதால் பயிர் செய்ய இனி நிறைய பணம் செலவு செய்ய வேண்டும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். உடைப்பை சரிசெய்யும் பணியில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். மணல்மூடைகள் அடுக்கி முதலில் சரிசெய்து விட்டு பின்னர் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**புதுக்கோட்டை, திருமயத்தில் பலத்த மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

புதுக்கோட்டை,: புதுக்கோட்டையில் நேற்று பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தென்மேற்கு வங்க கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் பல்வேறு இடங்களில் மழை பெய்து வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் நேற்று மதியம் 1 மணி வரை புதுக்கோட்டையில் மழை பெய்தது. தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாய பணிகளை தொடங்கி உள்ள விவசாயிகளுக்கு இந்த மழை சற்று மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தை பொறுத்தவரை வானம் பார்த்த பூமியாக தான் உள்ளது. கடந்த பல ஆண்டுகளகவே புதுக்கோட்டை மாவட்டத்தில் பெய்ய வேண்டிய பருவ மழைகள் பெய்யாமல் பொய்த்து போனதால் மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகள் அனைத்தும் வறண்டு

ஆடு,மாடுகளுக்கு கூட குடிப்பதற்கு தண்ணீர் இல்லாத வகையில் விவசாயம் பாதிக்கப்பட்டது. இந்நிலையில் இந்தாண்டாவது பருவ மழை புதுக்கோட்டை மாவட்டத்தில் பெய்யும் என்று நினைத்து கொண்டிருந்து விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிச்சமானது. புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்தாண்டும் பருவ மழை பெய்யாமல் திடீர், திடீரென்று அவ்வப்பேதது மட்டும் ஏதோ ஓரிரு நாட்கள் மட்டுமே நல்ல மழை பெய்தது. இதனால் மாவட்டத்தில் பெரும்பாலும் வறண்டு கிடந்த நீர்நிலைகள் சற்று ஈரப்பதமானதை தவிர எந்த ஒரு நீர் நிலைகளும் நிரம்ப வில்லை. இதனால் விவசாயிகள் விவசாய தொழிலை செய்ய முடியாமல் மிகவும் கவலையடைந்திருந்தனர். இந்நிலையில் தற்பேர்து தென்மேற்கு வங்க கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலையால் தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. புதுக் கோட்டை மாவட்டத்தில் தற்போது விவசாய பணிகளில் ஈடுப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இந்த மழை சற்று மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. திருமயம்: திருமயம் பகுதியில் பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். திருமயம் ஒன்றியத்தில் கடந்த சில நாட்களாக லேசான மழை விட்டுவிட்டு பெய்து கொண்டு இருந்தது. திருமயத்தில் நேற்று முன் தினம் மாலை4 மணியில் இருந்து நேற்று காலை 9 மணி வரை பலத்த மழை கொட்டியது. இதனால் ஏரி, குளங்களுக்கு வரத்து வாயக்கால் மூலம் தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. சில பகுதிகளில் விவசாயிகள் குறுகிய கால பயிற்களை நடவு செய்து இருப்பதால் தற்போது பெய்த மழை பயிர்களுக்கு கை கொடுக்கும் என்று விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். மேலும் இந்த மழை தொடர்ந்து பெய்தால் அதிகமான விளைச்சல் கிடைக்குமென்று விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளனர். மழை அளவு புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவின் விவரம் மில்லி மீட்டரில் வருமாறு: புதுக்கோட்டை 9, பெருங்களூர் 8.60, ஆதனக்கோட்டை 2, இலுப்பூர் 3, கீரனூர் 3, திருமயம் 12, அரிமளம் 12, கீழாநிலை 30, காரையூர் 4.40, ஆலங்குடி 8, கறம்பக்குடி 4, மழையூர் 4,

கந்தர்வக்கோட்டை 4, அறந்தாங்கி 27.40, ஆயிங்குடி 11, நாகுடி 14, மணமேல்குடி 37, கட்டுமாவடி 17, ஆவுடையார்கோவில் 25.50, மீமிசல் 41 என மொத்தம் 286.10 மி.மீ மழை மாவட்டத்தில் பதிவாகி உள்ளது. இதில் சராசரியாக 11.44 மி.மீ மழை பெய்துள்ளது.

**பாக்டீரியா இலைக்கருகல் நோய் கட்டுப்படுத்துவது எப்படி?**

அன்னவாசல்: புதுக்கோட்டை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற்பயிரில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் ஆங்காங்கு தென்படுகிறது எனவும் அதனை கட்டுப்படுத்த தேவையான வழிமுறைகளை மேற்கொண்டு மகசூல் இழப்பினைத் தவிர்த்திடவும் புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் 'ஷாஜஹான், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் சாந்தி மற்றும் வேளாண்மை அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் ஆலோசனை தெரிவித்துள்ளனர். இது குறித்து அவர்கள் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: புதுக்கோட்டை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட சம்பா நெற்பயிரில் தற்போது நிலவும் மேகமூட்டமான வானிலை மற்றும் மழை காரணத் தினால் பாக்டீரியா இலைக்கருகல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்நோயின் அறிகுறிகள் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகளை அறிந்துகொண்டு விவசாயிகள் மகசூல் இழப்பினைத் தவிர்த்திட வேண்டும். நோய் அறிகுறிகள்: இந்நோய் தாக்கிய நெற்பயிரில் வாடல் மற்றும் இலை கருகலை ஏற்படுத்தும். இலைகள் கருகியது போன்று தோன்றும். ஆரம்பநிலையில் மஞ்சள் அல்லது வெளிறிய மஞ்சள் நிறத்தில் நீர்கசிவுள்ள புள்ளிகள் இலையின் நுனியில் தோன்றி கீழ்நோக்கி விளிம்புகளில் பரவும். இதனால் இலை நுனி மற்றும் விளிம்புகள் மஞ்சள் நிறமடைந்து காய்ந்து விடுகின்றது. நோய் பரவும் முறை: பாசன நீர்,மழை மற்றும் காற்று மூலம் பரவுகிறது. வானிலை மப்பும் மந்தாரமுமாக இருக்கும் போதும், தழைச்சத்தை அதிகமாக பயன்படுத்தும் போதும் இந்நோய் அதிக அளவில் பரவுகிறது. நோயினை கட்டுப்படுத்தும் முறைகள்: பரிந்துரை செய்யப்படும்

தழைசத்தை யூரியா மூலம் மூன்று, நான்கு முறையாக பிரித்து மேலுரமாக இடவும். சூடோமோனாஸ் புளுரொரசன்ஸ் பவுடர் கலவையை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் வீதம் விதைத்த 45 நாட்களுக்கு பிறகு 10 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்கவும். ஒரு ஏக்கருக்கு 40 கிலோ பசுஞ்சாணத்தை 10 லிட்டர் நீரில் கரைத்து ஓர் இரவு முழுவதும் வைத்திருந்து மறுநாள் அக்கரைசலை வடிகட்டித் தெளிந்த பசுஞ்சாணக் கரைசலுடன் தேவையான அளவு தண்ணீர் கலந்து 200 லிட்டர் கரைசல் தயார் செய்து கைத்தெளிப்பானால் மாலை வேளையில் பயிர் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும். இதே போன்று 10 நாட்கள் இடைவெளியில் இரண்டு அல்லது மூன்று வேளை தெளிக்க வேண்டும்.இந்நோயின் தாக்குதல் அதிகமாகும்போது ஒரு ஏக்கருக்கு 120 கிராம் ஸ்டெப்டிரோமைசின் சல்பேட் மற்றும் டெட்ராசைக்ளின் கலவையுடன் 500 கிராம் காப்பர் ஆக்சி குளோரைடு கலந்து தெளிக்கவேண்டும்.மேற்கண்ட முறைகளை கடைபிடித்து சம்பா நெற்பயிரில் பாக்டீரியா இலை கருகல் நோயினை கட்டுப்படுத்தலாம் என ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

## <u>கொள்ளிடம் பகுதியில் பூச்சி தாக்குதலால் சம்பா பயிர்கள் பாதிப்பு வேளாண் நிபுணர் குழு ஆய்வு</u>

கொள்ளிடம், :நாகை மாவட்டம், கொள்ளிடம் பகுதியில் சம்பா நெற்பயிர்களில் அதிக அளவில் பூச்சி தாக்குதல் ஏற்பட்டுள்ளதால் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் தலைமையிலான நிபுணர் குழுவினர் நேரில் சென்று பயிர்களை பார்வையிட்டு ஆய்வு நடத்தினர். கொள்ளிடம் பகுதியில் சம்பா சாகுபடியில் பி.பி.டி, 5204, எ.டி.டி46, 80, எ.டி.டி.43, ஆகிய ரக நெற்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்த பகுதியில் பரவலாக நெற்பயிர்களை பூச்சிகள் அதிக அளவில் தாக்கி சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. வேட்டங்குடி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் 855 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற்பயிரில் அதிக பூச்சி தாக்குதல்

ஏற்பட்டுள்ளது. இதை கட்டுப்படுத்த முடியாமல் விவசாயிகள் வேதனையடைந்தனர். இந்நிலையில் பூச்சிகளை கட்டுப்படுத்த ஆலோசனை வழங்க வேளாண்துறை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து மாவட்ட வேளாண் இணை இயக்குநர் பன்னீர்செல்வம் தலைமையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தைச் சேர்ந்த பூச்சியியல் பேராசிரியர்கள் முனைவர்கள் இளையபாரதி, அழகர், திலகம், கொள்ளிடம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் பால்ராஜ், வட்டார வேளாண் அலுவலர் கலியபெருமாள் ஆகியோர் அடங்கிய நிபுணர் குழுவினர் வேட்டங்குடியில் பூச்சிதாக்குதலுக்குட்பட்ட சம்பா நெற்பயிரை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். பின்னர் பூச்சியியல் பேராசிரியர் இளையபாரதி பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து விவசாயிகளிடம் கூறுகையில்; தற்பொழுது பகல் நேர வெப்பநிலை குறைவாக இருப்பதாலும் இரவு நேரங்களில் பனிப்பொழிவு ஏற்படுவதாலும் பயிர்களில் இலைசுருட்டுபுழு மற்றும் இலை கருகல்நோய் காணப்படுகிறது. இலைசுருட்டுப்புழு நோயை கட்டுப் படுத்த மழை பொழிவுக்கு பிறகு தழைச்சத்து உரம் அதிக பயன்படுத்து வதை தவிர்க்க வேண்டும். ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 18 கிலோ ஜிப்சம், வேப்பம் புண்ணாக்கு 4 முதல் 5 கிலோ வரை இவற்றுடன் கலந்து இரவு முழுவதும் வைத்திருந்து மறுநாள் காலையில் தெளிக்கும் போது பொட்டாஷ் 17 கிலோ கலந்து பயிருக்கு இடுவதன் மூலம் பூச்சி தாக்குதலிலிருந்து பயிரை காப்பாற்ற முடியும். அதிக பாதிப்பு ஏற்பட்டால் கார்டாப் ஹைட்ரோகுளோரைடு என்ற குருணை வடிவ பூச்சிக்கொல்லி மருந்தை ஏக்கருக்கு 6 கிலோ வீதம் 20 கிலோ மணலுடன் கலந்து தூவி பூச்சியை கட்டுப்படுத்தலாம். இலை கருகல்நோயை கட்டுப்படுத்த 20 சதவீத பசுஞ்சாண கரைசலுடன் 1 கிலோ சூடோமோனாஸ் என்ற நன்மை செய்யும் பாக்ட்டீரியாவுடன் கலந்து அதாவது 40 கிலோ பசுஞ் சாணத்துடன் 100 லிட்டர் தண்ணீர் கலந்து அதனுடன் சூடோமோனாஸ் 1 கிலோ சேர்த்து பயிருக்கு தெளிப்பதன் மூலம் இலைகருகல் நோய்

எளிதில் கட்டுப்படும். அதிக பூச்சி தாக்குதல் ஏற்பட்டால் காப்பர், ஹைட்ராக்சைடு என்ற பூச்சிகொல்லி மருந்தை ஏக்கருக்கு அரை கிலோ வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைதெளிப்பான் கொண்டு தெளிப்பதன் மூலம் இலைகருகல் நோய் முழுமையாக கட்டுப்படுத்த முடியும். இவ்வாறு அவர் தெரிவித்தார். ஊராட்சி தலைவர் கலைமாறன், ஒன்றிய கவுன்சிலர் உதயச்சந்திரன், வேளாண் விரிவாக்க அலுவலர்கள் கனகராஜ், பாலசந்திரன், ராமசந்திரன், வேதையராஜன், சந்திரசேகர், முன்னோடி விவசாயிகள் சீனிவாசன், சந்திரன்பிள்ளை நந்தா, லலிதா மற்றும் பலர் உடனிருந்தனர்.

## <u>காரைக்காலில் 10 மாதமாக தொடர்ந்து மகசூல் தரும் வீரிய ஒட்டுரக மிளகாய் அறுவடை</u>

காரைக்கால், : காரைக் காலை அடுத்த மாதூர் வேளாண் அறி வியல் நிலைய பண்ணையில் அறுவடை செய்யப்படும் புதிய வீரிய ஒட்டு ரக மிள காயை, நிலையத்தலைவர் சுரேஷ் ஆய்வு செய்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசும் போது; சாதாரணமாக பயிர் செய்யப்படும் நாட்டுரக பச்சை மிளகாய், 6 மாதம் மட்டுமே மகசூல் அளிக்கும். இந்த புதிய வீரிய ஒட்டுரக மிளகாய் கடந்த 10 மாதமாக மகசூல் தந்து வருகிறது. இது வரை சுமார் 106.500 கிலோ மகசூல் ஈட்டப்பட்டுள்ளது. இந்த ரக மிளகாய் செடி 1 மீட்டர் உயரம் வரை வளர்கிறது. அதிக காரத்தன்மை கொண் டது. நோய் தொற்று இன்றி சிறந்த வளர்ச்சியில் உள்ளது. ஒரு ஹெக்டேரில் 8 டன் வரை மகசூல் கிடைக்கிறது. இதுவரை 16 முறை அறுவடை செய்யப்பட்டுள்ளது. விரைவில் இந்த புதிய வீரிய ஒட்டுரக மிளகாய் வளர்ப்பு குறித்து இலவச பயிற்சி வழங்கவுள்ளோம் என்றார். பண்ணை மேலா ளர் ஆண்டனி, பக்கிரிசாமி மற்றும் பலர் உடனிருந்தனர்.

## திருத்துறைப்பூண்டியில் இயற்கை வேளாண் பாதுகாப்பு கருத்தரங்கம்

திருத்துறைப்பூண்டி: திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள ஆதிரெங்கம் கிரியேட் இயற்கை விவசாய வேளாண் மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஆலத்தம்பாடி ஜானகி அண்ணி அரசு மேல்நிலைப்பள்ளி வேளாண் பாட பிரிவு மாணவ, மாணவிகளுக் கான இயற்கை வேளாண் பாதுகாப்பான உணவு, வயல்வெளி குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. நெல் ஜெயராமன் கருத்தரங்கத் தை தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில்; நம் முன்னோர் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பாரம்பரிய நெல் ரகங்கள் பாதுகாத்து விட்டு சென்றுள்ளனர். அவற்றை சில உழவர்கள் தங்கள் உணவு தேவைக்காக உற்பத்தி செய்து வருகின்றனர்.அந்த விதை நெல்லை பெற்று மறு உற்பத்தி செய்து நிலத்தின் தன்மைக்கேற்ப இயற்கை சீற்றங்களை தாங்கி வளரும் நெல் ரகங்கள் மருத்துவ குணம் கொண்ட நெல் ரகங்கள் ஆராய்ச்சி செய்து பாரம்பரிய நெல் ரகங்களை விவசாயிகள் மத்தியில் தமிழகம் முழுவதும் பரப்பி வருகிறோம். நாம் மேற்கொண்ட ஆராய்ச்சியின் மூலம் 153 பாரம்பரிய நெல் வகைகள் சத்து மிகுந்ததாகவும், மருத்துவ குணம் கொண்டதாகவும் இயற்கை சீற்றங்களை தாங்கி வளரக்கூடியதாகவும் கண்டறியப் பட்டுள்ளது என்றார். திருவாரூர் நகராட்சி கவுன்சிலர் வரதராஜன், தலைமையாசிரியர் சுந்தரேசன், என்எஸ்எஸ் திட்ட அலுவலர் குமணன், ஆசிரியர் வில்லியம் ராபர்ட் கோபி, உம்பளச்சேரி பாரம்பரிய கால்நடை வளர்ப்போர் சங்க தலைவர் ஜானகிராமன், இயற்கை வேளாண் வல்லுநர் கரிகாலன், திருவாரூர் சமூக ஆர்வலர் மகேந்திரன் மற்றும் மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர். மைய ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் நன்றி கூறினார்

## இன்றைய வேளாண் செய்திகள்

**தென் கடலோர மாவட்டங்களில் இன்று அநேக இடங்களில் மழை பெய்யும் வானிலை மையம் தகவல்**

சென்னை, தென் கடலோர மாவட்டங்களில் இன்று (திங்கட்கிழமை) அநேக இடங்களில் மழை பெய்யும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

வடகிழக்குபருவமழை

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை பெய்துவருகிறது. தென் மாவட்டங்களில் போதிய மழை பெய்துள்ளது. ஆனால் அந்த அளவுக்கு வடதமிழ்நாட்டில் மழை பெய்யவில்லை. குறிப்பாக சென்னைக்கு குடிநீர் சப்ளை செய்யக்கூடிய ஏரிகள் இன்னும் நிரம்பவில்லை. எனவே அந்த ஏரிகளுக்கு தண்ணீர் சப்ளை செய்யக்கூடிய பகுதிகளில் பலத்த மழை பெய்தால் நல்லது என்று அந்த பகுதி விவசாயிகளும் பொதுமக்களும் நினைக்கிறார்கள். இந்த நிலையில் வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. அதன் காரணமாக தமிழ்நாட்டில் நேற்று முன்தினம் அநேக இடங்களில் மழை பெய்துள்ளது. நேற்றும் பரவலாக மழை பெய்தது. சென்னையில் ஆங்காங்கே லேசான மழை பெய்தது. இன்றைய வானிலை குறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மைய அதிகாரி கூறியதாவது:- இன்று மழை பெய்யும்

தென் மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உள்ளது. அதன் காரணமாக தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் இன்று (திங்கட்கிழமை) அநேக இடங்களிலும், வட மாவட்டங்களில் சில இடங்களிலும் மழை பெய்யும். நாளை முதல் மழையின் தன்மை தென் மாவட்டங்களில் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அந்த அதிகாரி

தெரிவித்தார். நேற்று காலை 8-30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

மழைஅளவு

பூதப்பாண்டி 7 செ.மீ., சிதம்பரம், கடலூர், காரைக்கால் தலா 5 செ.மீ., இரணியல், பரங்கிப்பேட்டை, தரங்கம்பாடி, பேச்சிப்பாறை தலா 4 செ.மீ., மணிமுத்தாறு, நாகர்கோவில், ஆணைக்காரன் சத்திரம், ஸ்ரீமுஷ்ணம், புதுச்சேரி, கீழ் கோதையாறு, சீர்காழி, மயிலாடுதுறை, தக்கலை, மயிலாடி, நெய்வேலி தலா 3 செ.மீ., வானூர், நன்னிலம், திருமயம், பாபநாசம், மரக்காணம், விழுப்புரம் தலா 2 செ.மீ., சேத்தியாதோப்பு, காட்டுமன்னார்கோவில், வேதாரண்யம், உளுந்தூர் பேட்டை, தென்காசி, தேவகோட்டை, திருவாரூர், குடவாசல், திருப்புவனம், சேரன்மகாதேவி, ஆடுதுறை, திருவிடைமருதூர், மதுரை, நீடாமங்கலம், கொளத்தூர், மாமல்லபுரம், கும்பகோணம், திருவாடானை, திண்டிவனம், அம்பாசமுத்திரம், விருத்தாசலம், மன்னார்குடி தலா 1 செ.மீ.

**<u>தொடர் மழை எதிரொலி பாபாநாசம் அணை 140 அடியை எட்டியது</u>**



விக்கிரமசிங்கபுரம், தொடர் மழை காரணமாக பாபநாசம் அணையின் நீர்மட்டம் 140 அடியை எட்டியது. ஓரிரு நாட்களில் அணை நிரம்பும் நிலையில் உள்ளதால் தாமிரபரணி ஆற்றிலும் தண்ணீர் வரத்து அதிகரித்துஉள்ளது.

நிரம்பியஅணைகள்

தென் மேற்கு வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி

காரணமாக தமிழகத்தின் தென் மாவட்டங்கள் மற்றும் கடலோர மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து உள்ளது. இதனால் நெல்லை மாவட்டம் முழுவதும் நல்ல மழை பெய்து வருகிறது. இந்த மழையால் மாவட்டத்தில் 100 அடிக்கு குறைவாக கொள்ளளவு கொண்ட ராமநதி, கடனாநதி, கருப்பாநதி, குண்டாறு, நம்பியாறு, கொடுமுடியாறு ஆகிய அணைகளும் ஏற்கனவே நிரம்பி விட்டன. பெரிய அணைகளான பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு ஆகிய அணைகள் இன்னும் ஓரிரு நாளில் நிரம்பும் நிலையில் உள்ளன.

140 அடியை தொட்டது பாபநாசம் அணை

பாபநாசம் அணையின் நீர்ப்பிடிப்பு மற்றும் தண்ணீர் வரத்து பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று அணை நீர்மட்டம் 138.45 அடியில் இருந்து ஒரு அடி உயர்ந்து 139.45 அடியாக இருந்தது. பாபநாசம் அணையின் மொத்த கொள்ளளவு 143 அடி ஆகும். இருந்த போதிலும் அணையின் பாதுகாப்பு கருதி 142 அடி தண்ணீர் மட்டுமே தேக்கி வைக்க முடியும். எனவே அணை நிரம்ப இன்னும் 2 அடி தண்ணீரே தேவைப்படுகிறது. நீர்மட்டம் 140 அடியை தொட்டு விட்டதால் ஓரிரு நாட்களில் அணை நிரம்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மற்றொரு பெரிய அணையான சேர்வலாறு அணையில் தற்போது 150.62 அடி தண்ணீர் உள்ளது. அணையின் மொத்த கொள்ளளவு 156 அடியாக இருந்த போதிலும், 150 அடி தண்ணீர் மட்டுமே தேக்கி வைக்க முடியும். எனவே பாதுகாப்பு கருதி அணைக்கு வரும் தண்ணீர் அப்படியே வெளியேற்றப்படுகிறது. இதனால் பாபநாசம் தலையணையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. 100 அடியானது மணிமுத்தாறுஅணை

மணிமுத்தாறு அணையில் நேற்று காலை 7 மணி நிலவரப்படி 100.10 அடியாக இருந்தது. கடந்த 5 ஆண்டுகளுக்கு பிறகு 100 அடியை இப்போது தொட்டு உள்ளது. அணையில் இருந்து நீர் வெளியேற்றம்

தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. கடலூரில் தொடர் மழை கடலூர் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக மழை பெய்தது. நேற்று காலையும் மழை பெய்தது. தொடர் மழைகாரணமாக சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் மாவட்டத்தில் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. மழை காரணமாக கடல் சீற்றமாக இருந்தது. இதனால் நேற்று 2-வது நாளாக மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன் பிடிக்க செல்லவில்லை. கடல் சீற்றம் காரணமாக தேவனாம்பட்டினத்தில் கடல் அரிப்புஏற்பட்டது. கடலூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக சிதம்பரத்தில் 48 மில்லி மீட்டர் மழை பதிவானது.

நாகப்பட்டினம்

நாகையில் நேற்று 3-வது நாளாக மழை பெய்தது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இந்த மழையால் நாகையில் கருவாடு காயவைக்கும் தொழில் முற்றிலும் பாதிக்கப்பட்டது. மேலும் நாகையில் கடல் சீற்றமாக காணப்பட்டது. இதனால் வேதாரண்யம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளான கோடியக்கரை, ஆறுகாட்டுதுறை, புஷ்பவனம், வெள்ளப்பள்ளம், வானவன்மகாதேவி, சிறுதலைக்காடு, தொண்டியக்காடு ஆகிய பகுதிகளை சேர்ந்த சுமார் 5 ஆயிரம் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை.

## எந்திரம் மூலம் நெல் நடவு செய்த விவசாயிகளுக்கு மானிய தொகை



அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், எந்திரம் மூலம் நெல் நடவு செய்த விவசாயிகளுக்கு மானியத்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சியில் நடப்பு சம்பா பருவத்தில் நெல் நடவை, எந்திரம் மூலம்

மேற்கொண்ட 100 விவசாயிகளுக்கு ரூ.1,500 வீதம் ரூ.1½ லட்சத்துக்கான மானிய தொகையை காசோலையாக கலெக்டர் சரவணவேல்ராஜ், சந்திரகாசி எம்.பி. ஆகியோர் வழங்கினர். நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அதிகாரி ரவீந்திரன், வேளாண் இணை இயக்குனர் குணசேகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## விசாகப்பட்டினத்தில் இருந்து சரக்கு ரெயில் மூலம் 2,650 டன் பொட்டாஷ் உரங்கள் ஈரோட்டுக்கு வந்தது ஓமன் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது



ஈரோடு, ஓமன் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 2 ஆயிரத்து 650 டன் பொட்டாஷ் உரங்கள் விசாகப்பட்டினத்தில் இருந்து சரக்கு ரெயில் மூலம் ஈரோட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

### விவசாய பணிகள்

ஈரோடு மாவட்டத்தில் காலிங்கராயன் மற்றும் தடப்பள்ளி–அரக்கன்கோட்டை வாய்க்கால்களில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளன. இதனைத்தொடர்ந்து பல விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களில் நெற்பயிர் சாகுபடியை தொடங்கி உள்ளனர். மேலும் மேட்டூர் காவிரி ஆற்றில் இருந்தும் விவசாயத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது. இதனைத்தொடர்ந்து சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் ஈரோடு ஆகிய 4 மாவட்டங்களில் விவசாய பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. கடந்த 3 ஆண்டுகளுக்கு பிறகு பருவமழை நன்றாக பெய்து உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் விவசாய வேலைகளை தொடங்கி உள்ளனர்.

### தட்டுப்பாடின்றி கிடைக்க..

இதன்காரணமாக 4 மாவட்ட விவசாயிகளுக்கும் உரம் தட்டுப்பாடின்றி கிடைக்க தமிழக அரசு தீவிர நடவடிக்கை எடுத்தது. அதன்பயனாக கடந்த 20–ந் தேதி காக்கி நாடாவில் இருந்து ரெயில் மூலம் 2 ஆயிரத்து 600 டன் எடை கொண்ட டி.ஏ.பி. உரம் ஈரோடு ரெயில் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டது. இந்த உரங்கள் ஈரோடு, சேலம், நாமக்கல், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு வினியோகம் செய்யப்பட்டன. இந்த நிலையில் மத்திய அரசின் கிரிப்கோ நிறுவனம் சார்பில் ஓமன் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொட்டாஷ் உரங்கள் கடந்த சில வாரங்களுக்கு முன்பு விசாகப்பட்டினம் துறைமுகத்துக்கு வந்தது.

<u>2,650 டன் பொட்டாஷ் உரங்கள்</u>

பின்னர் அந்த உரங்கள் அனைத்தும் சரக்கு ரெயிலில் ஏற்றப்பட்டு நேற்று காலை ஈரோடு ரெயில் நிலையத்துக்கு வந்தது. இதுகுறித்து அதிகாரி ஒருவர் கூறுகையில், ‘மத்திய அரசின் கிரிப்கோ நிறுவனம் சார்பில் ஓமன் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 2 ஆயிரத்து 650 டன் பொட்டாஷ் உரங்கள் 52 ஆயிரத்து 992 மூட்டைகளில் விசாகப் பட்டினத்தில் இருந்து சரக்கு ரெயில் மூலம் ஈரோட்டுக்கு வந்து உள்ளது. ரூ.4 கோடியே 23 லட்சத்து 93 ஆயிரத்து 600 மதிப்பிலான இந்த உர மூட்டைகள் ஈரோடு, சேலம், நாமக்கல், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு இங்கிருந்து லாரிகள் மூலம் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன,‘ என்றார்.

## <u>பறவைக்காய்ச்சல் நோய் எதிரொலி மீன் கடைகளில் குவிந்த மக்கள் கூட்டம்</u>



ஈரோடு, பறவைக்காய்ச்சல் நோய் எதிரொலி காரணமாக ஈரோட்டில்

உள்ள மீன் கடைகளில் மக்கள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. கோழி இறைச்சி கடைகள் வெறிச்சோடி காணப்பட்டன.

<u>பறவைக்காய்ச்சல் நோய்</u>

கேரளாவில் பறவைக்காய்ச்சல் நோய் பரவியதை தொடர்ந்து அங்குள்ள லட்சக்கணக்கான வாத்துகள் எரித்து அழிக்கப்பட்டன. மேலும் கேரள மாநிலத்தில் இருந்து பறவைக்காய்ச்சல் தமிழ்நாட்டுக்கு பரவக்கூடாது என்பதற்காக தமிழக அரசும் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதனைத்தொடர்ந்து கேரள மற்றும் கர்நாடக மாநிலத்தில் இருந்து வரும் அனைத்து கார், சரக்கு லாரிகள் மற்றும் வாகனங்களின் டயர் பகுதியில் பறவைக்காய்ச்சல் நோய் கிருமிகள் இருந்தால் அது பரவாமல் தடுப்பதற்காக தடுப்பு கிருமி நாசினி மருந்துகள் அடிக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமின்றி கேரள மாநிலத்தில் இருந்து வாத்து மற்றும் அதன் முட்டைகள் தமிழ்நாட்டுக்கு கொண்டுவர தடை செய்யப்பட்டு உள்ளது.

<u>அரசு தீவிர நடவடிக்கை</u>

அதுமட்டுமின்றி ஈரோடு, நாமக்கல் மற்றும் பல்லடம் பகுதிகளில் உள்ள கோழிப்பண்ணைகளில் பறவைக்காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்க கால்நடை அதிகாரிகள் முன்னெச்சரிக்கையாக தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஈரோடு மற்றும் அதனை சுற்றி உள்ள பெரும்பாலும் விசைத்தறி, சாய மற்றும் சலவைப்பட்டறை, தோல் தொழிற்சாலை, நூற்பு ஆலை உள்பட பல தொழிற்சாலைகளில் ஏராளமான தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். இந்த தொழிலாளர்கள் பலரும் வாரத்துக்கு ஒரு நாள் அதுவும் ஞாயிற்றுக்கிழமைகளில் இறைச்சி எடுத்து சமைத்து குடும்பத்துடன் சாப்பிடுவார்கள்.

<u>மீன் கடையில் குவிந்த கூட்டம்</u>

அதிலும் பெரும்பாலானோர் கோழி இறைச்சியையே அதிகம் விரும்பி வாங்கி சாப்பிடுவர். இந்த நிலையில் பறவைக்காய்ச்சல் நோய் எதிரொலியாக ஈரோட்டில் உள்ள பல கோழி இறைச்சிக்கடைகளில் மக்கள் கூட்டத்தை காணமுடியவில்லை. ஈரோட்டில் உள்ள மீன்

கடைகளில் அதிக அளவு கூட்டத்தை காண முடிந்தது. ஈரோட்டில் ஸ்டோனி பாலம், காவிரி ரோடு, பி.பி.அக்ரஹாரம் ஆகிய பகுதிகளில் மீன் மார்க்கெட் உள்ளது. அதுமட்டுமின்றி ஈரோட்டின் பல பகுதிகளில் சிறிய மீன் கடைகளும் உள்ளது. இந்த கடைகளில் மீன்களை வாங்க மக்கள் அதிக அளவில் குவிந்தனர். <u>விலை குறைய வாய்ப்பு</u>

இதுகுறித்து ஸ்டோனி பாலம் மீன் வியாபாரி சின்ராஜ் கூறுகையில், 'கார்த்திகை மாதம் அய்யப்பனுக்கு உகந்த மாதம் என்பதால் பலரும் சபரிமலைக்கு மாலை அணிந்து விரதம் இருப்பர். இதன் காரணமாக மீன் விற்பனை குறைந்து காணப்படும். ஆனால் தற்போது பறவைக்காய்ச்சல் நோய் பரவி வருவதால் பொதுமக்கள் பலரும் மீன்களை வாங்க வருகின்றனர். எனவேதான் மீன் கடைகளில் கூட்டம் அதிக அளவில் உள்ளது. ஒரு கிலோ வஞ்சிரம் மீன் ரூ.450–க்கும், விளை மீன் ரூ.350–க்கும், பாறை மீன் ரூ.300–க்கும், சீலா மீன் ரூ.300–க்கும், இறால் மீன் ரூ.400–க்கும், சங்கரா மீன் ரூ.250–க்கும், லோகு மீன் ரூ.130–க்கும், கட்டலா மீன் ரூ.130–க்கும், கொடுவாய் மீன் ரூ.160–க்கும், நெய் மீன் ரூ.120–க்கும், சிலேபி மீன் ரூ.100–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. மக்கள் கூட்டம் அதிகம் இருந்தாலும் மீன் விலையை உயர்த்தாமல் கடந்த வாரத்தில் விற்ற விலைக்கே விற்பனை செய்து வருகிறோம். மண்டல பூஜை நெருங்கி வருவதால் ஈரோடு மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளில் உள்ள பக்தர்கள் பெரும்பாலோனோர் சபரிமலைக்கு மாலை அணிவிப்பர். எனவே அடுத்த வாரம் மீன் விலை குறைய வாய்ப்பு உள்ளது,' என்றார்.

## <u>கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்துகள் வழங்கும் முகாம் கலெக்டர் ஜெயந்தி தொடங்கி வைத்தார்</u>



கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் விலை யில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்துகள் வழங்கும் முகாமை மாவட்ட கலெக்டர் ஜெயந்தி தொடங்கி வைத்தார். மருந்துகள் வழங்கும் முகாம் கரூர் மாவட்டம், தான் தோன்றி ஊராட்சி ஒன்றியம் தாளப்பட்டி ஊராட்சி இந்திரா காலனியில் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்துகள் வழங்கும் முகாம் நடைபெற்றது. கலெக்டர் ஜெயந்தி தலைமை தாங்கி விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்து வழங்கி முகாமினை தொடங்கி வைத்தார். மேலும் விலையில்லா ஆடுகளுக்கு ஆட்டு கொட்டகை அமைக்க 58 பயனாளிகளுக்கு தலா ரூ.2 ஆயிரம் வீதம் ரூ.1 லட்சத்து 16 ஆயிரம் மதிப்பிலான காசோலைகளை வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:– விலையில்லா ஆடுகள் வழங்கும் பணி தமிழக முதல்– அமைச்சரால் கடந்த 2011 செப்டம்பர் மாதம் தொடங்கி வைக்கப்பட்ட விலையில்லா ஆடுகள் திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தில் 2011–2012–ம் ஆண்டில் ஆயிரத்து 842 பயனாளிகளுக்கு 7 ஆயிரத்து 368 ஆடுகளும், கடந்த 2012–2013–ம் ஆண்டில் 3 ஆயிரத்து 3 பயனாளிகளுக்கு 12 ஆயிரத்து 12 ஆடுகளும், கடந்த 2013–2014–ம் ஆண்டில் 2 ஆயிரத்து 391 பயனாளிகளுக்கு 9 ஆயிரத்து 564 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் நவம்பர் 2014 முடிய ஆயிரத்து 861 பயனாளிகளுக்கு 7 ஆயிரத்து 444 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 157 கிராம ஊராட்சிகளில் நவம்பர் 2014 முடிய 122 கிராமங்களுக்கு விலையில்லா ஆடுகள் வழங்கும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. வருகிற டிசம்பர் மற்றும் ஜனவரி மாதத்தில் மேலும் 8 கிராமங்களுக்கு வழங்கப்பட உள்ளது. மீத முள்ள 27 கிராம ஊராட்சிகளுக்கு அடுத்த நிதியாண்டில் விலையில்லா ஆடுகள் வழங்கப்படும். 3 மாதங்களுக்கு ஒருமுறை விலையில்லா ஆடுகள் திட்டத்தில் கரூர் மாவட்டத்தில் நவம்பர் மாதம் 2014–ம் ஆண்டு முடிய வழங்கப்பட்ட 36 ஆயிரத்து 388 ஆடுகளிலிருந்து

இதுவரை 43 ஆயிரத்து 350 குட்டிகள் பிறந்துள்ளன. ஆடுகள் திடகாத்திரமாகவும், நோய் எதிர்ப்பு சக்தியுடனும் அதிக குட்டிகளை ஈன்றிடவும் கால்நடை பராமரிப்பு துறை மூலம் 3 மாதங்களுக்கு ஒருமுறை குடற்புழு நீக்க முகாம் நடத்தப்பட்டு தக்க மருந்துகள் மற்றும் சிகிச்சை பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. கிராம மகளிர்களுக்கு வழங்கப் படும் ஆடுகளில் இருந்து பெறப்பட்ட குட்டிகளை விற்று பயனாளிகள் அவர்களது வாழ்வாதாரத்தினை உயர்த்தி கொண்டுள்ளனர். மேலும், தங்களுக்கு வழங்கப்பட்ட 4 ஆடுகளை நன்கு பராமரித்து குட்டிகளை விற்காமல் வளர்த்து ஆட்டுப்பண்ணை உரிமையாளர்களாக அனைத்து பயனாளிகளும் உருவாக வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். இந்நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர்.எல்.பழனிவேல், உதவி இயக்குநர் டாக்டர். என்.குழந்தைவேல், கால்நடை மருத்துவர்கள் பிரதீபா, சுமதி, தாளப்பட்டி ஊராட்சித் தலைவர் யுவராஜ், கால்நடை ஆய்வாளர் சக்திவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## <u>உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 513 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்</u>

கூடலூரில் உழவர் பாது காப்பு திட்டத்தின் கீழ் 513 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர்பாஸ் கரபாண்டியன் வழங்கினார்.

உழவர்பாதுகாப்புதிட்டம்

வருவாய்த்துறை சார்பில் உழவர் பாதுகாப்பு திட்டத் தின் கீழ் கல்வி, திருமண நிதி, இயற்கை மற்றும் விபத்து மரணம், ஆதரவற்றோர், முதி யோர் ஓய்வூதியம் உள்பட பல் வேறு திட்டங்களுக்கான நிதி உதவி வழங்கும் விழா கூட லூரில் நடைபெற்றது. விழா வுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கர பாண்டி யன் தலைமை தாங்கினார். இதில், கூடலூர் எம்.எல்.ஏ. திராவிடமணி, தாசில்தார் ராமச்சந்திரன்,

நகரசபை தலைவர் ரமா, ஓவேலி பேரூ ராட்சி தலைவர் ஸ்ரீதேவி ஆகி யோர் முன்னிலை வகித்தனர். விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கர பாண்டி யன் பேசிய போது கூறிய தாவது:-


தகுதிஇல்லாதவர்கள்நீக்கம்

மக்களின் தேவைகளை அறிந்து தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல் படுத்தி வருகிறது. இதில், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முதியோர் ஓய்வூதியத்தொகை கிடைப்பதில்லை என புகார் கள் வரப்பெற் றன. இப்புகாரின் பேரில் ஆய்வு நடத்தி தகுதி யான பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். சொந்தமாக நிலம் வைத்திருப்போர், பிள் ளைகளுடன் வாழ்பவர்கள், பொருளாதார வசதி படைத்த முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்க முடியாது. மேலும், வேறு பயனாளிகளுக்கு அர சின் திட்டங்கள் கிடைக்க வேண்டும் என்பதற்காக தகுதி இல்லாதவர்கள் நீக்கப்பட்டு வருகின்றனர். உண்மையான தகுதி உள்ள வர்களுக்கு மட்டுமே அரசின் நலத்திட்டங்கள் வழங்கப் படும். எனவே பயனாளிகள் அனைவரும் அரசின் திட்டங் களை பெற்று சமூதாயத்தில் முன்னேற்றம் பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

நிதிஉதவி

இதையடுத்து, 513 பயனாளி களுக்கு மொத்தம் ரூ.16 லட் சத்து 33 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலு வலர் பாஸ்கரபாண்டியன் வழங்கி னார். இந்த நிகழ்ச்சியில் ஆர். டி.ஓ. நேர்முக உதவியாளர் இன்னாசி முத்து, சமூக நலத் திட்ட தாசில்தார்கள் மணி மேகலை, சிக்கனுமான், வரு வாய் ஆய்வாளர் சங்கர் கணேஷ், கிராம நிர்வாக அலு வலர் பாலசுப்பிரமணி உள் பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**<u>ஒரு மாதமாக 100 அடிக்கு கீழ் குறையாத மேட்டூர் அணை நீர்மட்டம் விவசாயிகள் மகிழ்ச்சி</u>**



மேட்டூர் அணை நீர்மட்டம் தொடர்ந்து ஒரு மாத காலமாக 100 அடிக்கு கீழ் குறையாமல் உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

<u>மேட்டூர் அணை</u>

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசன பகுதிகளுக்காக கடந்த ஆகஸ்டு மாதம் 10–ந் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. அப்போது அணையின் நீர்மட்டம் 113 அடியாக இருந்தது. இந்த தண்ணீர் பாசன தேவைக்கு ஏற்றவாறு அதிகரித்தோ, குறைத்தோ திறந்து விடப்பட்டது. இதன் காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து கடந்த அக்டோபர் மாதம் 30–ந் தேதி 100 அடியாக காணப்பட்டது.

<u>நீர்வரத்து அதிகரிப்பு</u>

இந்தநிலையில் டெல்டா பாசன பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக தண்ணீரின் தேவை குறைந்தது. இதனால் அணையில் இருந்து பாசனத்துக்கு மிகவும் குறைவாகவே தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனிடையே அணைக்கு நீர்வரத்து தண்ணீர் திறப்பை விட அதிகரித்ததால் மேட்டூர் அணை நீர்மட்டம் மீண்டும் உயர தொடங்கியது. நேற்று மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 104.38 அடியாக இருந்தது. (உச்சபட்ச நீர்மட்டம் 120 அடியாகும்.) அணையில் இருந்து கால்வாய் பாசனத்துக்கு வினாடிக்கு 700 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 5 ஆயிரத்து 590 கனஅடியாக அதிகரித்து உள்ளது. இதனால் அணையின் நீர்மட்டம் மேலும் உயர வாய்ப்பு உள்ளது. கடந்த ஒரு மாதமாக மேட்டூர்

அணையின் நீர்மட்டம் தொடர்ந்து 100 அடிக்கு கீழ் குறையாமல் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## <u>பெரியகுளத்தில் பூக்கள் விலை உயர்வு</u>



பெரியகுளம், தேனி மாவட்டம், பெரிய குளத்தில் பூக்களின் விலை உயர்ந்து உள்ளது. தற் போது விசேஷ காலம் என்ப தாலும், பலர் கோவில்களுக்கு மாலை அணிவித்துள்ளதாலும் பூக்களின் தேவை அதிகம் உள்ளது. அத்துடன் தற்போது இரவு நேரங்களில் கடும் பனி அடிப்பதால், பூக்கள் மகசூல் குறைந்து உள்ளது. இதனால் பூக்களின் விலை அதிகரித்துள்ளது. பெரியகுளத்தில் உள்ள பூ வியாபாரிகள் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டைக்கு சென்று பூக்களை மொத்தமாக வாங்கி வருகின்றனர். மல்லிகைப்பூ ஒரு கிலோ ரூ.1000–க் கும், கனகாம்பரம் ரூ.1,500–க் கும் விற்பனை செய்யப்பட்டது. செவ்வந்திப் பூ ரூ.100–க்கும், சம்பங்கி ரூ.150–க்கும், ரோஜா பூ ரூ.70–க்கும் விற்பனை செய்து செய்யப்பட்டு வருகிறது.

## <u>இயற்கை உரத்தை பயன்படுத்தி கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் கேரட் அமோக விளைச்சல்</u>



உத்தமபாளையம், கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் இயற்கை உரத்தை பயன்படுத்தி கேரட் விவசாயம் அமோக விளைச்சல் அடைந்து உள்ளது.

<u>கேரட் விவசாயம்</u>

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் நெல், வாழை, தென்னை, கருப்பு திராட்சை விவசாயம் அதிக அளவில் நடக்கிறது. இதைதவிர காய்கறி விவசாயமும் நடந்து வருகிறது. இயற்கையிலே மிதமான தட்பவெப்பம் விவசாயத்திற்கு ஏற்ற மண்வளம் இருப்பதால் இந்த பகுதியில் விவசாயம் சிறப்பு பெற்று விளங்குகிறது. கேரட் விவசாயம் மலைப்பிரதேசங்கள் மற்றும் குளிர்பிரதேசங்களில் தான் அதிக அளவில் நடைபெறும். ஆனால் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியான சுருளிப்பட்டியில் விவசாயி ஒருவர் பரிசோதனை முறையில் முதன் முதலாக 60 சென்ட் நிலப்பரப்பில் கேரட் விவசாயம் செய்து சாதனை புரிந்துள்ளார். இதில் முக்கிய அம்சமாக இயற்கை உரத்தை மட்டும் பயன்படுத்தியுள்ளார். கொடைக்கானல் கேரட்டை காட்டிலும் பெரிதாகவும், இனிப்பு தன்மை குறைவாகவும், அதே நேரத்தில் கெட்டியாகவும் கேரட் விளைந்து உள்ளது.

<u>இயற்கை உரம்</u>

இதுகுறித்து விவசாயி ஒருவரிடம் கேட்ட போது, கம்பம் அருகே உள்ள சுருளிப்பட்டியில் 5 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் திராட்சை, கோவங்கா, கத்திரிக்காய் உள்ளிட்ட விவசாயம் செய்து வருகிறேன். இந்த பகுதி மலை அடிவாரப்பகுதியாக இருப்பதால் எப்போதும் குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை நிலவும். இதன் காரணமாக கேரட் விவசாயம் செய்யவேண்டும் என்று ஆர்வம் வந்தது. இதையடுத்து கொடைக் கானலில் சென்று கேரட் விதைகளை வாங்கி வந்தேன். நிலத்தை நன்கு உழுது மண்ணை கேரட் விவசாயத்திற்கு ஏற்றபடி பாத்தி அமைத்து, சொட்டு நீர்ப்பாசனம் மூலம் விவசாயம் செய்தேன். இதில் உரம் மற்றும் பூச்சிமருந்துகள் தெளிக்கவில்லை. அதற்கு பதிலாக இயற்கை உரமான மாட்டு எருவை பயன்படுத்தினேன். செடிகளில் பூச்சிதாக்கினால் வேப்பம் கொட்டையை அரைத்து தெளித்து விடுவேன். இந்த விவசாயத்திற்கு விதை மற்றும் கூலித்தொழிலாளர்கள் சேர்த்து ரூ.40 ஆயிரம் செலவு செய்தேன். ஆனால் கேரட் விளைச்சல் சுமார் 5 ஆயிரம் கிலோவுக்கு

அதிகமாக கிடைத்து உள்ளது. கேரட் விதைப்பு பணியில் இருந்து 100 நாட்களில் விளைச்சல் அடையும். இதன் மூலம் எதிர்பார்த்ததைவிட அதிக லாபம் கிடைக்கிறது. தொடர்ந்து கேரட் விவசாயம் செய்ய ஆர்வமாக இருக்கிறேன் என்றார்.